IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 38/2021

Deposition of Witness : DW 1

Name : சொக்கலிங்கம் (வயது – 75)

Father's Name /W/o : த/பெ வாசுதேவன்

Religion : இந்து

Calling : –

Address : மோசூர்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 03.03.2026.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் தென்னக ரயில்வேயில் வேலை செய்து ஓய்வு பெற்றேன். ரயில்வேயில் வேலை செய்த காரணத்தினால் சென்னையில் உள்ள அலுவலகம் மற்றும் அரக்கோணத்திலி உள்ள அரசு அலுவலகம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். நான் எத்தனை ஆவணங்கள் குறியீடு செய்துள்ளேன் என்ற விபரம் தெரியுமா என்றால் 15 ஆவணங்கள் குறியீடு செய்துள்ளேன். பிரேமாவதி எனக்கு என்ன உறவு என்றால் என் பெரியப்பா மகள் ஆவார். வாதி பாண்டியராஜன் மற்றும் 2 ஆம் வாதி பாபு எனக்கு என்ன உறவு முறை என்றால் என் தாத்தாவின் கூட பிறந்த தங்கையின் மகன் பாண்டியராஜன் மற்றும் பாபு பாண்டியராஜின் மகன் ஆவார்.

2. நான் குறியீடு செய்த 2 ஆம் ஆவணம் சொத்து விபரம் பழைய சர்வே எண்.500/1 புதிய சர்வே எண்.882/7 மொத்தம் 1008 சதுரடி காலிமனை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 3 என்ன காரணத்திற்காக திருத்தம் செய்துள்ளேன் என்றால் வீட்டுமனை 7 க்கு பதிலாக 8 என்று திருத்தம் செய்துள்ளேன்.

3. மேற்படி வா.சா.ஆ – 1 படி சுந்தரவதனம் (2 ஆம் பிரதிவாதி) என்பவருக்கு பழைய சர்வே எண்.500/1 புதிய சர்வே எண்.882/7 விற்றுவிட்டு 16 வருடங்களுக்கு பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு வீட்டுமனை எண்ணை திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2005 ஆம் ஆண்டு பழைய சர்வே எண்.500/1 தான் என் சொத்து என்றாலும் நான் வாதியின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடம் திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கு எந்த சம்பந்தமில்லை என்றாலும் வாதி கோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**